# Anode Fabricators Pvt Ltd

Innovation In Inert Metals

MMO, Platinized Ti & Nb Anodes



#48, Noothanchery, Madambakkam, Chennai – 73, India. Ph: 0091 44 2278 1148 Fax: 2278 1362 Email: info@tianode.com Web: www.tianode.com


# INTER - ORGANIZATIONAL NEWSLETTER – DECEMBER 2006

## MAN OF THE MONTH



**MR. M. PULLAN**

Maintenance

## FORECASTING 06-07

| | |
|---|---|
| Turnover | : 200% ↑ |
| Employment | : 5% ↑ |
| Profitability | : 100% ↑ |
| Rejection Rate | : 100% ↓ |

## TESTIMONIALS

**Customers:**

| | |
|---|---|
| Up to October 06 | : 207 Nos |
| Up to November 06 | : 210 Nos |

**Performance: November 06**

| | |
|---|---|
| Turnover growth | : 63.58% |
| Employment growth | : 01.37% ↓ |
| 100% Attendance | : 12.50% |

## MANAGEMENT

| | |
|---|---|
| Ms. P.E. Nancy | – Director |
| Mrs. J. Vanajambika | – Director |

## KEY PERSONS

| | |
|---|---|
| Mr. M.P.V. Jeyakumar | - CEO. |
| Mr. RS. Thangappan | - GM. |
| Mr. R. Vijaya Sai | - QA. |
| Mr. M. Suyambu | - Planning. |
| Mr. T. Amaladhas | - Plating. |
| Mr. T. Ramesh | - Purchase. |
| Mr. N. Murugan | - Production. |
| Mr. RM. Ravi Chandran | - Marketing. |
| Mr. C. Sounder Suresh | - Stores. |
| Mr. C. Babu | - Finance. |

## ACHIEVEMENT




# இன்பம் எங்கே?

"நண்பா, நீ ஏன் உழைக்கிறாய்?" - கேள்வி

"வாழ வேண்டுமே அதற்காகத்தான்" - பதில்

இதன் பொருள் என்ன? பணம் சம்பாதிக்க வேண்டும் என்பது தானே!
'சரி வாழ வேண்டும்! எப்படி வாழ வேண்டும்' துன்பமில்லாமல் இன்பமாக வாழ வேண்டும். அப்படியானால் வாழ்வதற்கு என்பதை இன்பத்திற்காக உழைக்கிறோம் என்று சொல்லலாம் தானே!

ஆனால் நமது உழைப்பு, நாம் செய்கின்ற வேலை நமக்கு இன்பத்தைத் தருகின்றதா? திருப்தியை தருகின்றதா? - இல்லை. எனவே உழைத்து நேரத்தையும் பணத்தையும் சம்பாதித்து கொண்டு இன்பத்தைத் தேடி புறப்படுகின்றோம் இசைக்கச்சேரி, நடனநிகழ்ச்சி, திரைப்படம், சுற்றுலா, பொழுது போக்கு என்று.

எதற்கு மன மகிழ்ச்சியை நாடித்தானே! நாம் விரும்புகின்ற மனதிற்குப் பிடித்த ஒன்றை 'வேலை' என்று கூறுவதில்லை. பொழுது போக்கு, உல்லாசம், கேளிக்கை என்றெல்லாம் கூறிக் கொள்கிறோம். இந்த பொழுதுபோக்குகளும், கேளிக்கைகளும் நாம் செய்கின்ற வேலையை விட சிரமமானதாக இருக்கும். ஆனாலும் இதை நாம் வேலை என்று சொல்வதில்லை ஏன்?

ஏனெனில் இவற்றை நாம் நம்முடையவையாக நமது வாழ்வின் ஒரு பகுதியாக நமது உள்ளத்தின் நிறைவாக எடுத்துக் கொள்கிறோம். மாறாக தொழிற்சாலையில், வங்கியில், அலுவலகத்தில் செய்வது வேலை, ஏனென்றால் அவர்களுக்காக அல்ல, அவர்கள் செய்வதெல்லாம் முதலாளிக்காக, வாரத்தில் 6 நாட்கள் நாளுக்கு 8 மணிநேரம் என வேலைபார்த்து பின்னர் எப்படியாவது நேரம் சம்பாதித்துக் கொண்டு தாங்கள் விரும்புவது போல் சுதந்திரமாக பொழுதை போக்க வேண்டும். இன்பம் அனுபவிக்க வேண்டும் ஆனால் நாம் நாடிய இன்பம் கிடைக்கிறதா? இல்லை . ஏனெனில் இன்பம் நம்முள் உள்ளது. எப்போது நாம் செய்கின்ற வேலை நமது ஆர்வத்தின் வெளிப்பாடாக நாம் இணைந்து ஈடுபடுகின்ற ஒன்றாக, நமக்கு நினைவாக இருக்குமோ அது மட்டுமே, அத்தகைய வேலையிலுருந்து மட்டுமே இன்பம் பெற முடியும்.

ஆர்.எஸ். தங்கப்பன்
பொது மேலாளர்

********

# நகைச்சுவை

இன்று ஒவ்வொருவரும் மன அமைதி இல்லாமல், மூளைக்கு அதிக வலியைக் கொடுத்துக் கொண்டு வேலைபார்த்து வருமானத்தை ஈட்டுகிறார்கள். இன்றைய மனிதர்கள் புகழையும், பொருளையும் தேடி ஓடிக் கொண்டிருக்கிறார்கள். இந்த சூழ்நிலையில் சந்தோஷமான வாழ்க்கையை மறந்து மன நிம்மதி இல்லாமல் வாழ்ந்து வருகிறார்கள். இதனால் வாழ்க்கையின் ஒரு முக்கியமாகத் திகழும் நகைச்சுவையை இழந்து விடுகிறார்கள்.

நகைச்சுவை என்பது வாழ்க்கையை மேம்படுத்துகிற ஒரு அருமருந்து. நகைச்சுவை இல்லாத வாழ்க்கை ஒரு அர்த்தமற்ற வாழ்க்கையாகும். பெரும்பாலும் நகைச்சுவையில் நாம் ஈடுபட்டிருக்கும் போது மூளை அதிக பளு இல்லாமல், நிதானமாக செயல்படுவதால், மனதிற்க்கு நிம்மதியைக் கொடுக்கிறது.

நகைச்சுவை என்றால் நகையும் இருக்க வேண்டும். சுவையும் இருக்க வேண்டும். கேட்பவர் காது குளிர வேண்டும். மனம் மகிழ்ச்சியால் இன்புற்று அதன் எதிரொலியாய் வாய்விட்டுச் சிரிக்க வேண்டும். உதாரணமாக, இருவர் கடுமையாக விவாதத்தில் ஈடுபட்டிருக்கும் போது, மூன்றாவதாக ஒருவர் நகைச்சுவையாக ஒரு உடன்பாடான கருத்தைக் கூறும்போது பேச்சின் வேகம் தணிந்து சிந்திக்க நேரம்


... 2

## FUNCTIONAL WISHES



**CHRISTMAS**
**DECEMBER 25**



Best wishes by Ti Employees

## PROVERB

கருணையும், சத்தியமும்
ஒன்றையொன்று சந்திக்கும்
நேர்மையும், அமைதியும்
ஒன்றையொன்று முத்தமிடும்

- ஆர்.எஸ்.தங்கப்பன்

## புதுப் பாதை!

ஒருநாள் மனிதன் கூன் நிமிர்ந்தான்-இந்த
உலகைப் புதிதாய்ப் பார்ப்பதற்கு!-அந்தத்
திருநாள் தொடங்கி தினம் நடந்தான்-எட்டுத்
திசைகள் அளந்து பார்ப்பதற்கு!

- ம. கிறிஸ் தீபக்

## இளைய தலைமுறை

சுவையான துணுக்குகள்

1. கழுத்தை திருப்பாமலேயே பின்புறம் பார்க்க கூடிய மிருகம் ஒட்டகம்.
2. பத்திரிகைகளில் கடைசி நேர செய்திக்காக ஒதுக்கப்பட்ட இடம் ‘ஸ்டாப்பிரஸ்’ என்பதாகும்.
3. டாக்டர் சீட்டு இல்லாமல் நேரடியாக மருந்து கடைக்காரரிடம் வாங்குபவை O.T.C மருந்து எனப்படும்.

அ. அம்பிகா
Si/o. அ. நிர்மலா

## EXTERNAL SUPPORT

| | |
|---|---|
| Banking | : United Bank of India |
| Auditing | : M/s. Nisar & Kumar |
| AQ Auditing | : M/s. Juran Quality |
| Legal Adviser | : Lr. M.K. Govindan |
| Central Excise | : Mr. Raghavan |

## BIRTH DAY WISHES



| | | |
|---|---|---|
| S. Keerthana | D/o. S. Sasirekha | Jan 05 |
| M. Vinoth Kumar | S/o.G.S.Mohan Kumar | Jan 07 |
| Mrs.G.Padma Priya | HRD | Jan 11 |
| Mr. A. Madhavan | B/o. A. Mohan | Jan 11 |
| Mrs. S. Sasirekha | Marketing | Jan 19 |
| Mr. M. Nagarajan | Production | Jan 20 |
| Mrs.J.Vanajambika | Director | Jan 27 |
| Mr. G. Ezhumalai | Production | Jan 29 |

எந்தக் குழந்தையும் நல்லக் குழந்தைதான்
மண்ணில் பிறக்கையிலே!
அவர் நல்லவராவதும் தீயவராவதும்
அன்னை வளர்ப்பினிலே!!

**Best Wishes by Ti Employees**

கிடைத்து நடுநிலையான முடிவு கிடைக்கும். இதற்க்கு அந்நபரின் நகைச்சுவை கலந்த ‘டைமிங் ஜோக்’கே காரணம் ஆகும். ‘எப்போதும் சிரித்துக் கொண்டே இருங்கள் உலகமும் உங்களுடன் சிரித்த முகமாக இருக்கும்’ என்பது மேலை நாட்டுப் பழமொழி. வாய்விட்டுச் சிரித்தால் நோய் விட்டுப் போகும் என்பது நம் முதுமொழி. மனம் விட்டுச் சிரிக்கும் போது வேண்டாத கவலையெல்லாம் பறந்து விடும்.

புத்திசாலிகள் நகைச்சுவையின் முனையளவு கருவைப் பிடித்து, அதை பெரும் நகைச்சுவையாக வெடிக்கச் செய்து சுற்றியுள்ளோரின் அன்பைப் பெற்று அவர்கள் முகம் மலர, தாம் எண்ணி வந்த காரியத்தைச் சாதித்துக் கொள்வார்கள். நகைச்சுவை உணர்வு பெற்றிருப்பவர்கள் இதமான, இயல்பானக் குணத்தை கொண்டு சமூகத்தில் நற்கீர்த்தியுடன் விளங்குவார் என்பது மறுக்க முடியாத உண்மையாகும். சினத்தால் நண்பர்கள், உறவினர்களை இழந்தவர் பலர். நகைச்சுவையால் எதிரியையும் நண்பராக்கிக் கொண்டவர் அநேகம்.

நகைச்சுவையாகப் பேசும் போது மிகவும் கவனமாக வார்த்தைகளைப் பிரயோகிக்க வேண்டும். சிரிக்க வைக்க முற்படுகிறேன் என்று மற்றவர்களின் மனதைப் புண்படுத்துவது போல் பேசுவது, உடல் ஊனத்தைப் பரிகாசமாகப்பேசுவது முற்றிலும் தவறானதாகும். இது நகைச்சுவைக் கணக்கிலும் சேராது. இது எதிர்விளைவை ஏற்படுத்தி, அரிய நட்பையே முரித்து விடும்.

நகைச்சுவை என்பது கடவுள் அருளிய கொடை, மனக்காயம் ஆற்றும் அருமருந்து. அதை இடம், பொருள், நேரம், காலம் பார்த்துப் பேசினால், பேசியவரை சிகரத்துக்குக் கொண்டு செல்லும். நட்பை வலுப்படுத்தும். நகைச்சுவையாகப் பேசக் கற்றுக்கொண்டால் நாம் இந்த உலகத்தில் ஒரு மிகச்சிறந்த மனிதராக மதிக்கப்படலாம்

தொகுத்தளித்தவர்
திருமதி. பத்ம பிரியா

********

## THE SHORT & CUTE PROVERB

You have to learn lessons also from Others mistakes, because you'll Not get time to do all the mistakes by your self.

Do ordinary for God.
He will do extra ordinary for you.
Do natural for God
He will do super natural for you.
Do possible for God.
He will do impossible for you.

சிறுகதைகள், கட்டுரைகள்
பணியாளர்கள் மற்றும்
குடும்பத்தினரிடமிருந்து
வரவேற்கப்படுகிறது.
– **Editor**

Prayer is not a spare wheel
That you pull out when you are in trouble.
Prayer is a staring that directs
You to right path throughout your life.

Smile increases your face value
Love increases your heart value
Pleasure increases your mind value
Prayer increases your life value.

A. Ambika
Si/o. A. Nirmala

********

**TUBE CUTTING MACHINE INVENTED BY OUR**
**Mr. K. Murugan and Mr. M. Raja**

